Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No C.C.NO.270/2023, Kandili PS Cr.No.32/2021
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியராஜ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | தேவராஜ் | தொழில் | பெட்ரோல் பங்க் |
| கிராமம் | குள்ளாக்காரன்குட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 05th day of May 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெட்ரோல் பங்க்கில் பெட்ரோல் போடும் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.02.2021 அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் SSA Bharath Petrol Bunk–ல் நான் என்னுடைய வண்டியை நிறுத்தி விட்டு வேலை செய்து கொண்டிருந்தேன். பின்னர் இரவு சுமார் 11.00 மணியளவில் நான் பெட்ரோல் பங்கில் தூங்கிக்கொண்டிருந்த போது என்னுடைய TN 83 R 5463 என்ற பதிவெண் கொண்ட Hero Dio வண்டியை 08.02.2021 அன்று அதிகாலை சுமார் 04.00 மணியளவில் எழுந்து பார்த்தபோது எனது வண்டியை காணவில்லை. அதன் பிறகு பெட்ரோல் பங்கில் உள்ள சிசிடிவி கேமிராவை Check செய்து பார்த்தபோது 2 பேர் வண்டியை எடுத்துச் சென்றதாக தெரிந்தது. அதன் பிறகு அக்கம் பக்கம் தேடிப்பார்த்தும் வண்டி கிடைக்காததால் 09.02.2021 அன்று கந்திலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் போலீசார் பெட்ரோல் பங்கிலுள்ள சிசிடிவி கேமிராவை Check செய்து பார்த்தனர். அதைத் தொடர்ந்து 11.02.2021 அன்று போலீசார் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தனர். அதன்

பிறகு சுமார் 1 1/2 வருடங்கள் கழித்து சேலத்திலிருந்து போலீசார் என்னுடைய வண்டி கிடைத்து விட்டது என்று என்னை போன் மூலம் தொடர்பு கொண்டனர். பின்னர் வாகனத்தை சேலத்திலிருந்து ஓசூருக்கு அனுப்பி வைத்திருந்தனர். அதைத் தொடர்ந்து நான் கந்திலி காவல் நிலைய போலீசார் ஒருவருடன் ஓசூருக்குச் சென்று என்னுடைய வாகனத்தை கந்திலி காவல் நிலையத்திற்கு எடுத்து வந்து கொடுத்தேன். அதன் பிறகு என்னிடம் கனம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து என்னுடைய வாகனத்தை பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் 4 புகைப்படங்களிலுமுள்ள வண்டி என்னுடையது தான். **அந்த வரிசை 1 முதல் 4 புகைப்படங்கள் அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய வண்டியை திருடிய நபரை கந்திலி காவல் நிலையத்தில் வைத்து எனக்கு போலீசார் அடையாளம் காட்டினார்கள். அவருடைய பெயர் கிருஷ்ணமூரத்தி ஆகும். கனம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் சாட்சியின் வாகனத்தை திருடிய நபர் என்று சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டது. இந்த வழக்கு குறித்து போலீசார் என்னிடம் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னை போலீசார் வண்டி கிடைத்ததற்கு பின்பு தான் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விசாரிக்கும் போது நான் தற்போது சொன்ன விவரங்களை கூறியுள்ளேனா என்றால் சரிதான். நான் எனது வாகனம் திருடுபோன சம்பந்தமாக எப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 09.02.2021 அன்று புகார் கொடுத்தேன். நான் போலீசார் விசாரிக்கும் போது 11 ம் தேதியன்று புகார் கொடுத்ததாக கூறியுள்ளேனா என்றால் சரியல்ல. வண்டி கிடைத்ததற்கு பிறகு தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் இடையில் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தபோது சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாராவது இருக்கிறார்களா என்று போலீசார் என்னிடம் கேட்டார்களா என்றால் புகார் கொடுக்கும் போது கேட்கவில்லை, பிறகு தான் கேட்டார்கள். விஜய், சரவணன் மற்றும் ராஜன் ஆகிய மூன்று பேரையும் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் சரிதான். அவர்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கப்பட்டுள்ளதா என்றால்

சரிதான். சேலத்திலிருந்து போலீசார் எனது வண்டி கிடைத்திருப்பதாக என்னை தொடர்பு கொண்டார்களா என்றால் சரிதான். நான் கந்திலி போலீசாருடன் சேலம் சென்றேன் என்றால் ஒசூருக்கு சென்றேன். நான் முதலில் சேலம் சென்று விட்டு ஒசூருக்கு சென்றேனா என்றால் சரியல்ல ஒசூருக்கு தான் சென்றேன். அங்கு ஆஜராகியுள்ள எதிரியைப் பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வண்டியை யாரிடம் ஒப்படைத்தார்கள் என்றால் போலீசாரிடம் ஒப்படைத்தார்கள். நானும் பூபதி என்பவரும் வண்டி பெறப்பட்டதற்காக சாட்சி கையொப்பம் செய்தோம். அது சம்பவம் நடந்து சுமார் 1 1/2 வருடங்கள் கழித்து நடந்தது. 1 1/2 வருடம் கழித்து காவல் நிலையத்தில் வண்டியை அடையாளம் காண்பிப்பதற்காக காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் ஆஜர் எதிரி எனது வண்டியை திருடினார் என்று எனக்குத் தெரியும் என்றால் சரிதான். வண்டி திருடு போனது சம்பந்தமாக சிசிடிவி காட்சியிலுள்ள அடையாளம் தெரியாத இரண்டு நபர்களை பிடிக்க முடியாததால் ஆஜர் எதிரியை எனது வாகனத்தை திருடியதாக போலீசார் கூறியதின் பேரில் அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு அதற்கு முன்பு ஆஜர் எதிரியை தெரியாது.

**மறுவிசாரணை இல்லை:—**

Signature of Witness.